பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*16 12 2025* *TUESDAY 7 15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

*தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, அரசுமுறைப் பயணமாக இன்று மாலை எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா சென்றடைந்தார்.
- ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் சேவைகளை சீரமைக்க காப்பீடு சட்டத்திருத்த மசோதா வழிவகை செய்யும் என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- இந்தியாவும் இஸ்ரேலும் தீவிரவாதத்திற்கு எதிராக இணைந்து செயல்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- சத்திஷ்கட் மாநிலம், பிஜப்பூர் மாவட்டத்தில் 34 மாவோயிஸ்ட்டுகள் காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.
- புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai – Vaidehi Chaudhari இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜோர்டான் பயணத்தை முடித்துக் கொண்டு அரசுமுறைப் பயணமாக இன்று மாலை எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா சென்றடைந்தார்.

அந்நாட்டு பிரதமர் திரு. Abiy Ahmed Ali-யுடன் இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

எத்தியோப்பிய நாடாளுமன்ற கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை உரையாற்றவுள்ளார்.

>>>>><<<<<

ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் சேவைகளை சீரமைக்க அனைவருக்கும் காப்பீடு, அனைவருக்கும் பாதுகாப்பு சட்டத்திருத்த மசோதா வழிவகை செய்யும் என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் இம்மசோதாவை தாக்கல் செய்து பேசிய அவர், ஆயுள் காப்பீட்டுச் சட்டம், காப்பீடு ஒழுங்குமுறைச் சட்டம், காப்பீட்டு சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவர இது வழிவகை செய்யும் என்று தெரிவித்தார்.

ஏழைகளின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு காப்பீட்டு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>><<<<<

காலாவதியான சட்டங்களை ரத்து செய்வது மற்றும் நடைமுறையில் உள்ள சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வருவது தொடர்பான மசோதா இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காலாவதியான இந்திய ட்ராம் போக்குவரத்துச் சட்டம், பாரத் பெட்ரோலிய நிறுவன ஊழியர்கள் தொடர்பான சட்டம் உள்ளிட்ட 71 சட்டங்களை திரும்பப் பெற இந்த மசோதா வகை செய்கிறது.

சிவில் நடைமுறைச் சட்டம் உள்ளிட்ட நான்கு சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வரவும் இந்த மசோதா வகை செய்கிறது.

மசோதாவை தாக்கல் செய்து பேசிய மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெக்வால், நாட்டின் சட்ட கட்டமைப்பில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு இந்த மசோதாவை கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

சட்டங்களின் பயன்கள் தங்குதடையின்றி மக்களுக்கு கிடைத்திட வேண்டும் என்ற நோக்கில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் என்ற மந்திரத்தின் அடிப்படையில் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பயன்பாட்டில் இல்லாத மொத்தம் 577 சட்டங்கள் இதுவரை திரும்பப் பெறப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்திலிருந்த மனநிலையை முற்றிலுமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில், இதுபோன்ற மசோதாக்கள் கொண்டுவரப்படுவதாகவும் திரு. அர்ஜூன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் அமைச்சகங்கள், துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் இடஒதுக்கீடு முறையாக பின்பற்றப்பட்டு வருவதாக மத்திய சமூக நலத்துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், தற்காலிக பணிகளிலும், தினக்கூலி அடிப்படையிலும், மத்திய அரசின் ஒதுக்கீடு முறைகள் பின்பற்றப்படுவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த ஐந்தாண்டுகளில் நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்கள் தொடர்பான தர ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், 2024-25ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 323 மருத்துவ மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதாகவும், இதில் மூவாயிரத்து 104 மருந்துப் பொருட்கள் தரமற்றது என்று கண்டறியப்பட்டதாகவும் கூறினார்.

245 வகையான மருந்துகள் போலியானவை என்றும், மருந்துகள் தொடர்பான புகார் எழுந்தால், உடனடியாக அரசு அதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் திருமதி. அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவும் இஸ்ரேலும் தீவிரவாதத்திற்கு எதிராக இணைந்து செயல்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

ஜெருசலேமில் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு. Gideon Saar-ருடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர், ஆஸ்திரேலியாவின் Bondi கடற்கரையில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் யூதர்களின் Hanukkah கொண்டாட்டங்களின் போது, தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அவர் இரங்கல் தெரிவித்தார்.

காஸா பகுதியில் அமைதியை நிலைநாட்ட இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

>>>>><<<<<

புதுச்சேரியில் சிறிய துறைமுகம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை என்று மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், புதுச்சேரியில் வற்றாத நதிகள் இல்லாத காரணத்தால் உள்ளூர் நீர் வழி போக்குவரத்துக்கு பயன்படும் துறைமுகம் அமைக்கும் வாய்ப்பில்லை என்று கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், பழவேற்காடு முகத்துவாரம் திட்டப் பணிகள் தொடர்பாக ஆந்திர மாநில அரசு விரிவான அறிக்கையை தயார் செய்து வருவதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆந்திர பிரதேச கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில், சாகர்மாலா திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக திரு. சர்பானந்த சோனோவால் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

நீண்ட நாட்கள் படுக்கையில் அவதியுறும் நோயாளிகள் மற்றும் முதியோரின் நலனுக்காக தேசிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், 600 மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

மருத்துவமனைகள் மட்டுமின்றி வீடுகளிலும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும், அரசு அங்கீகரித்துள்ள செவிலியர்கள் மூலம் இதற்கான சேவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடிப்படை மருத்துவ சோதனைகளை மேற்கொள்வதற்கான சாதனங்கள் இந்த செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதிகபட்சமாக, மத்தியப்பிரதேசத்தில் 51 மாவட்டங்களிலும், ராஜஸ்தானில் 42 மாவட்டங்களிலும், குஜராத்தில் 41 மாவட்டங்களிலும், தமிழகத்தில் 38 மாவட்டங்களிலும் இந்த மருத்துவப் பராமரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

நக்ஸல் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினருக்கு கடந்த பத்தாண்டுகளில் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அவர் அளித்துள்ள பதிலில், பாதிக்கப்பட்ட மாநிலங்களில் பாதுகாப்புப் படையினரின் கட்டமைப்பு வசதிகளுக்காக ஆயிரத்து 757 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளில் நக்ஸல் தீவிரவாதம் தொடர்பான வன்முறை 89 சதவீதம் குறைந்துள்ளதாக திரு. நித்யானந்த் ராய் கூறியுள்ளார்.

>>>>><<<<<

சத்திஷ்கட் மாநிலம், பிஜப்பூர் மாவட்டத்தில் 34 மாவோயிஸ்ட்டுகள் காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

இதில் 7 பேர் பெண்கள் என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஜிதேந்திர குமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

உத்தரபிரதேச மாநிலம், மதுராவில் நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

*யமுனா விரைவுச் சாலையில் ஏற்பட்ட இந்த விபத்தில் 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai – Vaidehi Chaudhari இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 6-3, 6-0 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Maria Mikhailova – டென்மார்க்கின் Elena Jamshidi இணையை வென்றது.*

*மற்றொரு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் வெற்றிபெற்று, Madhurima Sawant – Pooja Ingale இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஒற்றையர் பிரிவில், Anjali Rathi மற்றும் Shruti Ahlawat காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*துபாயில் இன்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில், இந்தியா 315 ரன் வித்தியாசத்தில் மலேசியாவை வென்றது.*

*>>>>>END<<<<<*